இன்டர்நெட் காதல்

Written by திலீபன்
Wednesday, 15 July 2009 04:18 -

ஈழத்து இளங்குயிலே
இன்டர்நெட்டில் உன்னைப் பார்த்தேனே
ஒஸ்ரியா வந்திருந்தும்
ஒன்லைனில் உன்னைக் கேட்டேனே

என் நோட்புக்கில் குடிபுகுந்து
வின்டோஸைத் திறப்பவளே
உன் ஹாட்புக்கில் இடம் தேட
பாஸ்வேர்ட்டைச் சொல்லாயோ?

கண்ணே உன் போன் நம்பர்
ஹாட் பீற்றாய் அடிக்குதடி
உன்னைக் காணாத நேரமெல்லாம்
ஹன்டி எந்தன் கையிலடி

எப்போதும் உன்னை ரசிக்க
எனக்குள் சற்றலைற்றைப் பூட்டி வைத்தேனே
சீக்கிரட்டாய் உடன் வந்து
ஒளிபரப்புச் செய்யாயோ?

ஹார்ட் கோர் இல் உன்னை மயக்க
ஹார்ட் வெயர்கள் பொருத்தி வைப்பேனே
ஸொப்ற் ஆன உன் அழகை
ஸொப்ற் வெயர் ஆய்ச் செதுக்கி வைப்பேனே.

திலீபன் **- 1997**

1 / 1